DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No.88/2020**

| Deposition of the | : | PW1 | Caste | : | |
|---|---|---|---|---|---|
| Name | : | சித்தி சுல்பா | Age | : | 57 |
| W/o | : | காஜா மைதீன் | Occupation | : | இல்லதரசி |
| Village | : | ஏர்வாடிதர்ஹா | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 06th day of November 2023.

**06.11.2023**

**( எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்டம் ஏர்வாடிதர்ஹாவில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. கடந்த 06.10.2019 ம் தேதி இரவு 12.30 மணிக்கு எனது கணவர் வீட்டிலிருந்து பாத்ரூம் செல்வதற்கு வெளியில் சென்றார். அவர் சென்று வெகு நேரம் ஆனதால் நானும், எனது மகனும் வெளியே சென்று தேடி பார்த்தோம். அப்போது கொம்பூதி விலக்கு ரோட்டில் உள்ள பெட்ரோல் பங்கில் பணிபுரியும் நபர்கள் கர்நாடகாவை சேர்ந்த வண்டி எனது கணவர் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாக சொன்னார்கள். நாங்கள் அங்கு சென்று பார்த்தபோது எனது கணவருக்கு நெற்றி, கை ஆகிய இடங்களில் பலத்த காயங்கள் இருந்தன. அவரை நாங்கள் கீழக்கரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர் எனது கணவர் இறந்துவிட்டதாக கூறினார். அதன் பின்பு நான் ஏர்வாடிதர்ஹா காவல் நிலையம் சென்று நடந்த சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க கேட்டு புகார் மனு அளித்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். (**புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). யார் விபத்தை ஏற்படுத்தியது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எங்கள் வீட்டிலிருந்து விபத்து நடந்த இடம் சுமார் 1 கி.மீ தொலைவில் இருக்கும் என்றால் சரிதான். எனது கணவருக்கு வயது 70 இருக்கும் என்றால் சரிதான். எனது கணவரின் மனநிலை சரியில்லாமல் இருந்தது என்றால் சரிதான். எனது கணவருக்கு கண் நன்றாக தெரியும். பெட்ரோல் பங்கில் பணிபுரிந்த நபர்களை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். பெட்ரோல் பங்க் அருகே மூன்று சாலைகள் உள்ளன என்றால் சரிதான். சம்பவம் நடந்த

சாலையில் வாகனங்கள் அதிகம் செல்லும் என்றால் ஒரு சில வாகனங்கள் செல்லும். புகார் மனுவை எனது சொந்தக்காரர் காவல் நிலையத்தில் வைத்து எழுதினார். யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை

**(ஒப்பம்/-க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**இராமநாதபுரம்.**

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No.88/2020**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW2 | Caste | : | |
| Name | : | அமீர் அப்பாஸ் | Age | : | 23 |
| F/N | : | காஜா மைதீன் | Occupation | : | கூலி வேலை |
| Village | : | ஏர்வாடிதர்ஹா | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 06th day of November 2023.

**06.11.2023**

**( எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்டம் ஏர்வாடிதர்ஹாவில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. கடந்த 06.10.2019 ம் தேதி இரவு 12.30 மணியளவில் எனது அப்பாவை காணவில்லை என்று நானும், எனது அம்மாவான அ.சா.1 னும் தேடினோம். அப்போது கொம்பூதி விலக்கு ரோட்டில் உள்ள ஒரு பெட்ரோல் பங்கில் வேலை பார்க்கும் நபர்கள் விபத்து நடந்ததாக சொன்னார்கள். நாங்கள் போய் பார்த்தபோது எனது அப்பா விபத்துக்குள்ளாகி கை மற்றும் தலையிலும் காயங்களுடன் இருந்தார். நாங்கள் ஆம்புலன்ஸ் மூலம் எனது அப்பாவை கீழக்கரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு எனது அப்பா இறந்துவிட்டதாக சொன்னார்கள். அதன் பின்பு ஏர்வாடி காவல் நிலையம் சென்று புகார் மனு அளித்தோம். யார் விபத்து ஏற்படுத்தியது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எங்கள் வீட்டிலிருந்து விபத்து நடந்த இடம் சுமார் 1 கி.மீ தொலைவில் இருக்கும் என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு வயது 70 இருக்கும் என்றால் சரிதான். எனது அப்பாவின் மனநிலை சரியில்லாமல் இருந்தது என்றால் சரியல்ல. எனது அப்பாவிற்கு கண் நன்றாக தெரியும். பெட்ரோல் பங்க் அருகே மூன்று சாலைகள் உள்ளன என்றால் சரிதான். சம்பவம் நடந்த சாலையில் வாகனங்கள் அதிகம் செல்லும் என்றால் சரிதான். புகார் மனுவை எனது அம்மா தான் எழுதினார்.

**மறு விசாரணை** : இல்லை

**(ஒப்பம்/-க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**இராமநாதபுரம்.**